# 2. தேசிய வருமானமும் செலவும்


## 2.1 பொதுவான போக்குகள்

2000ஆம் ஆண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொஉஉ), உண்மை நியதிகளில் 6.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இது முன்னைய ஆண்டின் வளர்ச்சி வீதமான 4.3 சதவீதத்தை விடவும், கடந்த தசாப்தத்தில் நிலவிய வளர்ச்சி வீதமான 5 சதவீதத்தை விடவும் சிறந்து காணப்பட்டது. பொருளாதார மீட்சி 1999இன் இரண்டாம் அரைப்பகுதியில் ஆரம்பித்ததுடன் 2000ஆம் ஆண்டில் விரைவான வேகத்தில் தொடர்ந்தது. இவ்வாண்டில் தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகள் சிறப்பாகச் செயலாற்றி, விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்புக்களை வழங்கின. நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1999இன் ரூ.1,106 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,256 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. நடு ஆண்டுக் குடித்தொகை வளர்ச்சி வீதம் 1.7 சதவீதத்துடன் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 1999இன் ரூ. 58,077 (ஐஅடொ 825) இலிருந்து 2000ஆம் ஆண்டில் ரூ. 64,855 (ஐஅடொ 856) இற்கு உயர்ந்தது. உலகவங்கி பகுப்பாய்வின்படி, இலங்கை, ஐ.அ.டொலர் 795-3,125 வீச்சினுள் தலைக்குரிய வருமானத்தைக் கொண்டிருக்கும் குறைந்த நடுத்தர வருமான நாடுகள் வகையினுள் பின்னைய 90களில் பிரவேசித்ததுடன் அன்றிலிருந்து அவ் வகையினுள் அதன் நிலையை முன்னேற்றியது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய்க்கு சீராக்கம் செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி என வரைவிலக்கணம் செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி (மொதேஉ) 5.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. முதலீட்டு வருமானத்திலிருந்தான பெறுகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, வெளிநாட்டுப் படுகடன் மீதான அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் இலாபங்களினதும், பங்கிலாபங்களினதும் கூடிய வெளிப்பாய்ச்சல்கள் என்பனவற்றின் காரணமாக இவ்வாண்டில் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம், மோசமடைந்தது.

2000 ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சிச் செயலாற்றம், உலகப் பொருளாதாரம் அதன் மந்தநிலைப் போக்கிலிருந்து மீண்டமையாலேயே முக்கியமாக ஏற்பட்டதாகும். உலக வெளியீடு 1999இல் பதிவு செய்யப்பட்ட 3.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 4.7 சதவீதத்தால் விரிவடைந்தது. இதன் விளைவாக, உலக வர்த்தகம் 1999இன் 5 சதவீத வளர்ச்சிக்கெதிராக 10 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் ஏற்றுமதி வளர்ச்சி 9 சதவீதமாக விளங்கியது. இலங்கைப் பொருளாதாரம், விசேடமாக தனியார் துறை இவ் அபிவிருத்திகளுக்குச் சாதகமாக பதிலிறுத்தது. ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் 1993இலிருந்து ஆகக்கூடிய வெளியீட்டு வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் தயாரிப்புத்துறை கூடிய வளர்ச்சியை எய்தியது. இதேவேளை, அதிகரித்த இறக்குமதி விலைகளுக்கு மத்தியிலும், பணவீக்கம் சார்புரீதியிலான குறைந்த மட்டத்திற்கு கட்டுப்படுத்தப்பட்டிருக்கையில், வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலான அதிகரித்த நெகிழ்ச்சித் தன்மை ஏற்றுமதிப் போட்டித் தன்மையை முன்னேற்றியது.

இவ்வளர்ச்சி வீதம் இரண்டு பாதகமான நிகழ்வுகளின் கீழ் எய்தப்பட்டமையானது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.. முதலாவது பன்னாட்டு எண்ணெய் விலை அதிகரிப்பு, இது, மசகெண்ணெய் மற்றும் பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி மீதான செலவை முன்னைய ஆண்டின் ஐக்கிய.அ.டொலர் 500 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 901 மில்லியனுக்கு அதிகரித்தது. மற்றையது, 2000ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து தீவிரமடைந்த யுத்தம் காரணமாக எழுந்த உயர்ந்த பாதுகாப்புச் செலவு ஆகும். இவ்விரண்டும், உள்நாட்டு மூலங்களிலிருந்தான அரசதுறை கடன்பாட்டுத் தேவைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியமையினால் நிதியங்களின் செலவில் மேல் நோக்கிய அழுத்தம் காணப்பட்டது. மேலும் எண்ணெயின் அதிகரித்த இறக்குமதி விலைகளின் காரணமாக இவ்வாண்டில் பல தடவைகளில் பெரும்பாலான பெற்றோலிய உற்பத்திகளின் நிருவகிக்கப்பட்ட விலைகளை அதிகரிப்பதற்கு எடுத்த தீர்மானம் உற்பத்திச் செலவில் மேலும் அதிகரிப்புக்களுக்கு இட்டுச் சென்றது.

வரைபடம் 2.1
மொ.உ.உ.வளர்ச்சி வீதங்களும் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியும்
1991 - 2000




எனினும், முன்மதியுடைய பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டமையால் பொருளாதாரத்தில் காணப்பட்ட வலுவான மீட்சி பாதகமான அபிவிருத்திகளின் எதிர்க்கணியத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த இயலச் செய்ததுடன், இவ்வாண்டில் எய்தப்பட்ட அதிகரித்த வளர்ச்சி வீதத்திற்கும் பங்களிப்புச் செய்தது. பொருளாதாரத்தின்

விரிவாக்கமானது கூடிய பொருளாதார வாய்ப்பு வசதிகளை உருவாக்கி வேலையற்றோர் வீதத்தை 1999இன் 8.9 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 7.7 சதவீதத்திற்கான வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றது. இதேவேளை, மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கியால் அளவிடப்படும் பொதுவான விலைப் பணவீக்கம் 1999இனைவிட அதிகரித்துக் காணப்பட்ட போதிலும், பொருட்கள் மற்றும் பணிகளின் வழங்கலில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் முன்மதியுடனான நாணய முகாமைத்துவத்தாலும் 6.7 சதவீதத்தில் சார்புரீதியில் குறைவாகக் காணப்பட்டது.

2000ஆம் ஆண்டில், தயாரிப்புத்துறை 9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. கைத்தொழில் ஏற்றுமதிகள் 23 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 4,200 மில்லியனுக்கும் மேலான தொகையை வருவாயாகப் பெற்றதுடன், அதிகரித்துச் செல்லும் இறக்குமதிக் கொடுப்பனவுகளினால் எழும் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளையும் ஓரளவுக்கு எதிரீடு செய்தது. உலகளாவிய பொருளாதார வளர்ச்சி முக்கியமாக ஐக்கிய அமெரிக்க நாடுகளில் காணப்பட்ட செழிப்பு நிலைமைகள் மற்றும் மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட உறுதியான பொருளாதார விரிவாக்கம் என்பனவற்றினால் அதிகரித்த கேள்வி மூலமாக ஏற்றுமதித் தயாரிப்புக்களை நன்மையடையச் செய்தன. கிழக்கு ஆசிய பொருளாதாரங்களின் மீட்சியுடன் அவற்றின் நாணயங்களில் ஏற்பட்ட பெறுமான உயர்ச்சி இலங்கை ரூபாவின் விரைந்த பெறுமானத்தேய்வும் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் பன்னாட்டு போட்டித்தன்மையை முன்னேற்ற உதவியது. உள்நாட்டில், வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் நெகிழ்ச்சித் தன்மையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இம்முயற்சி, இலங்கை ரூபாவை ஒரு குறிப்பிடத்தக்க பெறுமானத்தேய்விற்கு இட்டுச் சென்றதுடன், ஏற்றமதிப் போட்டித்தன்மையை இவ்வாண்டில் அதிகரித்தது. எனினும், இலங்கையின் கைத்தொழில் ஏற்றுமதிகள் ஆடை ஏற்றுமதிகளில் பெருமளவு தங்கியிருப்பதுடன், இவை இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின் உயர்ந்த கூறினைக் கொண்டிருப்பதுடன் அதிகரித்த போட்டித்தன்மை உள்ள சந்தைகளை பலமாக எதிர்கொள்ள வேண்டியும் இருக்கிறது. இது, குறிப்பாக உள்நாட்டு பெறுமதி கூட்டப்பட்ட கைத்தொழில்களின் பங்கை அதிகரிப்பதற்கு ஏற்றுமதிக் கைத்தொழில்களை மேலும் விரிவடையச் செய்வதற்கான தேவையொன்றினை வலியுறுத்துகிறது.

வேளாண்மை சம்பந்தமாக அண்மைய ஆண்டுகளிலான கொள்கையின் முக்கிய கவனம் யாதெனில் செயற்றிறன் மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்தும் நோக்கில் அரச தலையீடுகளை படிப்படியாக அகற்றல் ஆகும். இக் கொள்கை பெருந்தோட்ட வேளாண்மையில் விசேடமாக தேயிலைத் துறையில் நடைமுறையிலிருந்தது.1995இல் ஆரம்பித்த அரசுக்குச் சொந்தமான பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் தனியார் மயமாக்கலுடனும் தனியாருக்குச் சொந்தமான சிறு உடைமைத் துறையில் ஏற்பட்ட விரிவாக்கத்தாலும் தேயிலைத் துறையிலான செயற்றிறன் குறிப்பிடத்தக்களவில் முன்னேறியது. எக்டேயருக்கான தேயிலையின் சராசரி விளைச்சல் 1995இன் 1,302 கி.கி இலிருந்து 2000ஆம் ஆண்டில் 1,549 கி.கி இற்கு அதிகரித்ததுடன் தேயிலை உற்பத்தியும் 306 மில்லியன் கி.கி கொண்ட புதிய சாதனையொன்றை எய்தியது. இலங்கையில் தேயிலைத் துறையின் உற்பத்தித்திறன் போட்டி நாடுகளை விட குறிப்பிடத்தக்களவில் குறைவாகக் காணப்படுவதுடன், இத்துறை தனியார் முகாமைத்துவத்தின் கீழ் தொடர்ந்து மேம்படும் என்பது வெளிப்படையாகத் தோன்றுகின்றது. எனினும், சில உள்நாட்டு வேளாண்மைத் துணைத் துறைகளில் உள்ள விவசாயிகள் மலிவான இறக்குமதிகளிலிருந்தான கடும் போட்டியை எதிர்கொண்டதன் காரணமாக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கான ஆகக் குறைந்த சந்தை விலையை உறுதிப்படுத்துமுகமாக சில பாதுகாப்புக் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. உதாரணமாக, நெற்றுறையில், முன்னைய ஆண்டில் குறைந்த தீர்வை வீதங்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு ஒன்று சேர்ந்த இருப்புக்கள் காரணமாக அவர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதில் விவசாயிகள் பிரச்சனைகளை எதிர்நோக்கினர். கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தினூடாக நெல்லைக் கொள்வனவு செய்வதன் மூலம் அரசாங்கம் தலையிட்டதுடன் 2000ஆம் ஆண்டு யூலையிலிருந்து அரிசி இறக்குமதி மீது தடையொன்றையும் விதித்தது. உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையிலும் அரசாங்கத்தின் தலையீடு அவதானிக்கப்பட்டதுடன், உத்தரவாத விலையொன்று வழங்கப்பட்டு இறக்குமதித் தீர்வைக்கு மேலதிகமாக 2000ஆம் ஆண்டு ஒகத்திலிருந்து 35 சதவீத மிகைக்கட்டணமொன்றும் விதிக்கப்பட்டது. இத் தலையீடுகள் துரதிஷ்டவசமாக பொதுவாக கொள்கை நெறிப்படுத்தலில் முரண்பாடான சமிக்ஞைகளை வழங்கின. பலதரப்பட்ட உதவிக் கொடுப்பனவுகளால் ஆதரவு வழங்கப்பட்ட குறைந்த உற்பத்திச் செலவுடைய வெளிநாட்டு உற்பத்தியிலிருந்து உள்நாட்டு வேளாண்மை பாதுகாக்கப்பட வேண்டுமென விவாதிக்கப்பட்டது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கான துறைரீதியான பாரிய பங்களிப்பு, வலு, போக்குவரத்து,தொடர்பூட்டல்கள், துறைமுகப் பணிகள், வர்த்தகம் மற்றும் நிதியியல் பணிகளை உள்ளடக்கிய பணிகளில் ஏற்பட்ட விரிவாக்கத்திலிருந்து பெறப்பட்டது. இத்துறை மொத்த வளர்ச்சியின் 61 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்ததுடன், இது 1999இன் 51 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கதாகும். உலக

பொருளாதாரத்தில் ஏற்பட்ட மேம்பாட்டினால் செழிப்புற்ற வெளிநாட்டு வர்த்தகத் தொழிற்பாடுகள் 2000ஆம் ஆண்டில் பணிகள் துறையின் செயலாற்ற வளர்ச்சிக்கு பெரிதும் காரணமாக விளங்கின. உள்கட்டமைப்பு அபிவிருத்தியிலான முதலீடும் பணிகள்துறையிலான வளர்ச்சியின் மீது சாதகமான தாக்கமொன்றைக் கொண்டிருந்தது. அண்மைக் காலங்களில் தொலைத்தொடர்பூட்டல்களில் அவதானிக்கப்பட்ட உறுதியான வளர்ச்சிவிசை 2000ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. பன்னாட்டு ஒத்துழைப்புக்கள் யப்பானிய வங்கி, (பஓயவ) சுவீடிஸ் பன்னாட்டு அபிவிருத்தி முகவர் மற்றும் கொரிய பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் ஆகியவற்றின் உதவியுடன் சிறீலங்கா ரெலிகொம் அதன் இயலளவை மேலும் அதிகரிப்பதற்கும் உட்கட்டமைப்பை மேலும் முன்னேற்றுவதற்கும் தொலைத்தொடர்பூட்டல் செயற்றிட்டங்கள் பலவற்றை இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தியது. வலுத்துறையில், மின்வலுவின் மொத்த நிறுவப்பட்ட இயலளவு இலங்கை மின்சபையாலும் தனியார் துறையாலும் 2000ஆம் ஆண்டில் மேலும் விரிவாக்கப்பட்டது. இம் முதலீடுகளில், 60 மெவா கொண்ட கப்பலில் பொருத்தப்பட்ட மின்வலுப் பொறி, இலங்கை மின்சபையால் நிறுவப்பட்ட 40 மெவா கொண்ட இரண்டாம் மின்வலுப் பொறி என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இதேவேளை, இலங்கை துறைமுக அதிகாரசபை இயலளவை விரிவாக்குவதற்கும் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும் பல உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியது. முக்கிய செயற்றிடங்களினுள், இலங்கை துறைமுக அதிகாரசபையினாலும் பன்னாட்டு ஒத்துழைப்புக்கான யப்பானிய வங்கியினாலும் நிதியிடப்பட்ட புதிய வடக்கு அலைகரை அபிவிருத்தி செயற்றிட்டமும், சவுத் ஏசியா கேற்வே ரேமினல் பிறைவேற் லிமிற்றெட்டுக்குச் சொந்தமான குயீன் எலிசபெத் இறங்குதுறைச் செயற்றிட்டமும் துறைமுக இயலளவின் விரிவாக்கத்தை நோக்கமாகக் கொண்டிருந்தன. துறைமுக செயற்றிறனை முன்னேற்றும் செயற்றிட்டமொன்றுக்கு உலகவங்கி நிதியிட்டது. புதிய முதலீடுகள் போக்குவரத்து துறையிலான மேம்பாட்டில் முக்கிய பங்கொன்றினை வகித்தன. புதிய வலுப்பொறிகளின் கொள்வனவு இலங்கை புகையிரப்பகுதியின் பணிகள், வருமானம் ஆகிய இரண்டையும் அதிகரித்தவேளையில் புதிய வானூர்திகளின் கொள்வனவு சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியிலும் விரிவாக்கத்தை இயலச் செய்தது. இம்முக்கிய துறைகளில் மற்றும் இரண்டாம் நிலைத்துறைகளில் மேற்கொள்ளப்பட்ட அதிகரித்த முதலீடுகள் முதனிலை மற்றும் இரண்டாம் நிலைத்துறைகளில் உற்பத்தித்திறனை அதிகரித்தன.

2000ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் ரூ.351 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது 1999இனை விட 16 சதவீதம் கூடியதாகும். மொத்த உள்ளாட்டு மூலதன ஆக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் ஏற்பட்ட அதிகரித்த முதலீட்டின் விளைவால் ஏற்பட்டதாகும். இதன்படி, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான முதலீட்டு விகிதம் 1999இன் 27 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 28 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ் அபிவிருத்தி, முதலீட்டு விகிதம் 21 சதவீதத்திலிருந்து 22 சதவீதத்திற்கு மேம்பாடடைந்த தனியார் துறையிலிருந்து மட்டுமே வந்தது. அரசதுறை முதலீடு 6.7 சதவீதத்திலிருந்து 6.6 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

## 2.2 துறை வாரியான செயலாற்றம்

2000ஆம் ஆண்டில் தயாரிப்புத்துறை (9 சதவீதம்), பணிகள் (7 சதவீதம்), கட்டடவாக்கம் (5 சதவீதம்), சுரங்க மகழ்தலும் கல்லுடைத்தலும் (5 சதவீதம்), வேளாண்மை (2 சதவீதம்) என்பவற்றின் உண்மை நியதிகளிலான கூட்டிய பெறுமதி அதிகரித்தது. பணிகள் துறை பொதுவாக மொத்த உள்ளாட்டு உற்பத்தியின் வளர்ச்சியில் 61 சதவீதத்திற்கு பங்களிப்பு செய்தது. பணிகள் துறையில், ஆகக்கூடிய பங்களிப்பு மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத் துறையிலிருந்து பெறப்பட்டது. 1999இல் பொதுவான வளர்ச்சியின் 17 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்த தயாரிப்புத்துறை 2000ஆம் ஆண்டில் அதன் பங்கை பொதுவான வளர்ச்சியின் 26 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. பொதுவான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த ஏனைய துறைகளாக வேளாண்மை (6 சதவீதம்), கட்டடவாக்கம் (6 சதவீதம்), சுரங்க மகழ்தலும் கல்லுடைத்தலும் (1 சதவீதம்) என்பன விளங்கின.

### தயாரிப்புத் துறை

1999இல் 4.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த தயாரிப்புத் துறை 2000ஆம் ஆண்டில் 9.2 சதவீத கணிசமான வளர்ச்சியொன்றை எடுத்துக்காட்டியது. ஏற்றுமதி சார்ந்த துணைத்துறையான புடவைகளும் ஆடைகளும் 16 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. 1999இல் ஒப்பிடத்தக்க வளர்ச்சி வீதம் 7 சதவீதமாகும். 2000ஆம் ஆண்டில் மிகச் சிறப்பாக செயலாற்றிய ஏனைய ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களாக தயாரிக்கப்பட்ட இறப்பர் உற்பத்திப் பொருட்கள் பதனிடப்பட்ட வைரங்கள், பிளாத்திக்கு உற்பத்திகள் என்பன விளங்கின. தகவல் தொழில்நுட்பத்திலான மேம்பாடுகளும் உற்பத்தித் செயல்முறையில் மேம்பட்ட தொழில்நுட்பமும் தொழிற்சாலைக் கைத்தொழில்களின் உயர்ந்த கூட்டிய பெறுமதிக்கு பங்களிப்புச் செய்தன. உள்நாட்டுத் தயாரிப்பாளர்கள் புதிய சந்தைகள் மற்றும் புதிய மோஸ்தர்கள் என்பன தொடர்பான பெருமளவு

தகவல்களை விரைவானதும் கூடிய தகவல்களைக் கொண்டதும் குறைந்த செலவைக் கொண்டதுமான இணையத்தினூடாக பெற்றுக் கொள்கின்றனர். உயர் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் தயாரிப்பாளர்களை புதிய உற்பத்தித் தொழில் நுட்பத்தில் முதலீடு செய்யவும் உற்பத்திச் செலவுக் குறைப்பு மற்றும் தர மேம்பாடுகள் என்பவற்றினால் நன்மை பெறவும் தூண்டின. பொதுவான பொருளாதார நடவடிக்கைகளின் முன்னேற்றமானது உள்நாட்டுப் பொருளாதாரத்தக்கு பொருட்களை வழங்கும் கைத்தொழில்களுக்கான சந்தையொன்றை உருவாக்கியது. 1999இல் 2.2 சதவீதத்தால் வளர்ச்சிடைந்த உணவு குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திப் பொருட்கள் ஆய்வுக்குரிய ஆண்டில் 5 சதவீதத்தால் விரிவடைந்தன. இவ்வகையில் உணவு மற்றும் குடிபானம் துணை வகைசள் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை எடுத்துக் காட்டின. எனினும், இத்துறையின் மீதான வரிகள் அதிகரிக்கப்பட்டமையத் தொடர்ந்து இவ்வாண்டில் வெறியக் குடிவகை மற்றும் புகையிலை துணைத்துறை வகைகளின் செயலாற்றம் குறைவாகவே காணப்பட்டது.

தேயிலை, இறப்பர், தெங்கு என்பனவற்றின் உள்ளீட்டு உற்பத்திகளைப் பதனிடும் கைத்தொழில் இவ்வாண்டில் 4.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. தேயிலை மற்றும் தெங்கு உற்பத்திப் பொருட்களில் ஏற்பட்ட முன்னேற்றமே இதற்கான அடிப்படைக் காரணமாகும். இதேவேளையில் சிறு கைத்தொழில்களும் 5.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. பாரிய அளவிலான கைத்தொழில்களில் ஏற்பட்ட விரிவாக்கமானது துணை ஒப்பந்தம் மற்றும் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றின் வடிவில் சிறு கைத்தொழில்கள் மீது எப்போதுமே சாதகமான தாக்கமொன்றினை கொண்டிருந்தது. சிறு கைத்தொழில் வகையில், கணணி மற்றும் தொடர்பூட்டல் கருவிகளின் உடற்கோப்பு, இலகு பொறியியற்துறை, வாகனங்களின் பேணல், குளிரூட்டல்கள் பணிகள் ஆகியன விரைவான வீதமொன்றில் வளர்ச்சியுற்றன. எனினும் அதிகரித்துச் செல்லும் எரிபொருள் விலைகள் மற்றும் வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்புகளால் ஆண்டின் பிற்பகுதியில் சிறு கைத்தொழில்கள் சில இடர்களை எதிர்நோக்கின.

## பணிகள் துறை

2000ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அதிஉயர் பங்களிப்பினை வழங்கிய துறையாக, பெறுமதி கூட்டல் நியதிகளில் பொருளாதாரத்தின் மிகப்பெரிய துணைத்துறையான

**அட்டவணை 2.1**

**நிலையான (1996) விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்**

| துறை | அதிகரிப்பு வீதம் (%) | | மொத்த தேசிய உற்பத்தி மாற்றங்களுக்கான பங்களிப்பு | | மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|
| | 1999(அ) | 2000(அ) | 1999(அ) | 2000(அ) | 1999(அ) | 2000(அ) |
| 1. வெளாண்மை, காட்டுத்தொழில் கடற்றொழில் | 4.5 | 1.8 | 22.2 | 9.2 | 21.3 | 20.5 |
| வேளாண்மை | 4.4 | 1.7 | 16.7 | 4.6 | 16.6 | 15.9 |
| தேயிலை | 1.3 | 7.8 | 0.4 | 1.8 | 1.4 | 1.4 |
| இறப்பர் | 1.0 | -8.0 | 0.1 | -0.6 | 0.4 | 0.4 |
| தெங்கு | 9.1 | 8.0 | 3.5 | 2.3 | 1.7 | 1.8 |
| நெல் | 6.6 | -0.3 | 5.1 | -0.2 | 3.5 | 3.2 |
| ஏனையவை | 3.4 | 0.8 | 7.6 | 1.3 | 9.6 | 9.1 |
| காட்டுத்தொழில் | 1.3 | 1.6 | 6.3 | 2.4 | 4.4 | 4.3 |
| கடற்றொழில் | 7.6 | 2.5 | 0.6 | 0.5 | 2.0 | 1.9 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல்லுடைத்தலும் | 4.1 | 4.8 | 1.7 | 1.4 | 1.8 | 1.7 |
| 3. தயாரிப்புத் தொழில் | 4.4 | 9.2 | 17.3 | 25.9 | 16.9 | 17.4 |
| தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டுப் பதனிடல் | 3.8 | 4.2 | 1.9 | 1.5 | 2.1 | 2.1 |
| தொழிற்சாலைக் கைத்தொழில் | 4.5 | 10.4 | 14.0 | 23.2 | 13.5 | 14.0 |
| சிறு கைத்தொழில் | 4.8 | 5.5 | 1.4 | 1.2 | 1.3 | 1.3 |
| 4. கட்டடவாக்கம் | 4.8 | 4.8 | 7.8 | 5.6 | 7.1 | 7.0 |
| 5. மின்வலு, வாயு, நீர் | 9.5 | 4.5 | 3.1 | 1.1 | 1.5 | 1.5 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பு | 8.1 | 7.8 | 20.9 | 14.9 | 11.6 | 11.8 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் | 1.0 | 8.7 | 5.0 | 31.2 | 21.5 | 22.1 |
| இறக்குமதி | -1.4 | 12.9 | -3.2 | 20.0 | 9.3 | 10.0 |
| ஏற்றுமதி | 6.1 | 18.3 | 3.3 | 7.3 | 2.4 | 2.7 |
| உள்நாடு | 2.1 | 2.4 | 4.9 | 3.9 | 9.8 | 9.5 |
| 8. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 4.6 | 6.4 | 8.0 | 8.0 | 7.5 | 7.6 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை | 1.2 | 1.6 | 0.5 | 0.5 | 1.8 | 1.8 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 4.2 | 4.2 | 4.8 | 3.4 | 4.9 | 4.8 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 9.8 | 2.3 | 8.9 | 1.6 | 4.1 | 4.0 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 4.3 | 6.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்துறை விளங்கியது. வெளிநாட்டு வர்த்தகமே அதற்கு முழுமையான காரணமாக விளங்கியது. முன்னைய ஆண்டில் 6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த ஏற்றுமதி வர்த்தகத்துறை 2000ஆம் ஆண்டில் 18 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இத் துணைத்துறையில் கைத்தொழில் ஏற்றுமதிகள் அதிஉயர் அதிகரிப்பான 23 சதவீதத்துக்கு வகை கூறின. முன்னைய ஆண்டில் பின்னடைவுக்குள்ளான இறக்குமதி வர்த்தகம் 13 சதவீத வளர்ச்சியை பதிவு செய்தது. இவ்வகையில், நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் அளவு நியதிகளில் 20 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் முறையே 11 சதவீதத்தாலும், 12 சதவீதத்தாலும் அதிகரித்தன. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனையில் ஈடுபட்டிருக்கும் உள்நாட்டு வர்த்தகத் துறையிலான வளர்ச்சி 2.4 சதவீதமாக விளங்கியது.

போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் துறையிலான கூட்டிய பெறுமதி 7.8 சதவீதத்தால் அதிகரித்து அண்மைய ஆண்டுகளில் காணப்பட்ட வளர்ச்சி விசையினைப் பேணியது. 1996 இலிருந்து பாரியளவிலும் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்த தொலைத்தொடர்புகள் துணைத்துறை வளர்ச்சிக்கான மேலதிக உந்து விசையை வழங்கி முன்னைய ஆண்டை விட 31 சதவீதத்தால் விரிவடைந்தது.

அண்மைய ஆண்டுகளில் கட்டுப்பாடு நீக்கல் மற்றும் தனியார் மயமாக்கலிலிருந்து நன்மையடைந்த தொலைத் தொடர்பூட்டல் கைத்தொழில் 2000 ஆம் ஆண்டில் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. 1996 இற்கு முன்பு அரசாங்கத்தின் தனியுரிமையாக இருந்த இக் கைத்தொழில் என்என்ரி, ரெலியா, ரெலிஸ்ரா, ஜீரீஈ நோர்டெல், ஹசின்சன், மற்றும் மலேசியா ரெலிகொம் போன்ற புதிய உலகலாவிய சந்தைத் தொழிற்பாட்டாளர்களின் நுழைவுடன் அதன் அமைப்பில் புரட்சிகரமான மாற்றமொன்றைக் கண்டது. சிறீலங்கா ரெலிகொம் மற்றும் தனியார் தொழிற்பாட்டாளர்கள் ஆகிய இரண்டினதும் கீழ் வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. கடுமையான போட்டி சிறீலங்கா ரெலிகொம்மின் பணிகளை மேம்படுத்தியதுடன் சிறீலங்கா ரெலிகொம்பின் வாடிக்கைகயாளர் தளத்தின் அரைவாசியைக் கொண்டிருக்கும் கொழும்பு மாநகரப் பகுதியில் தொலைபேசி தடைப்படலில் "பூச்சியத் தடை" இலக்கு எய்தப்பெற்றது. மாநகரப் பகுதியில் சிறீலங்கா ரெலிகொம்மால் வழங்கப்படும் தொலைபேசிகளுக்காக காத்திருப்போரின் பட்டியல் வீழ்ச்சியடைந்த போதிலும், கிராமப் பகுதியில் இத்துறையிலிருந்தான புதிய இணைப்புக்களுக்காக அதிகரித்து வரும் கேள்வியின் காரணமாக கிராமப் பகுதிகளில் அது 5 சதவீதத்தால் அதிகரித்தது. அதிகரித்து வரும் கேள்வியை எதிர்கொள்ளும் பொருட்டு சிறீலங்கா ரெலிகொம் முக்கிய தொலைத் தொடர்பூட்டல் செயற்றிடங்கள் பலவற்றை தற்போது நடைமுறைப்படுத்தி வருகிறது. தனியார்துறையால் வழங்கப்படும் நிலையான தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை 2000ஆம் ஆண்டில் 25 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் செல்லிட கைத்தொலைபேசிகளின் வழங்கல் இவ்வாண்டில் 75 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து தொலைத்தொடர்பூட்டலில் புதிய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கிறது. பாரிய முதலீடு, தீவிரமான விளம்பரப் பிரச்சாரங்கள், புதிய வசதிகளை அறிமுகப்படுத்தல், போட்டித்தன்மை கொண்ட விலைகள் என்பன இவ்வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. இணையம் மற்றும் மின் அஞ்சல் பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கையும் 59 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. தொலைத் தொடர்பூட்டல் துறையிலான வளர்ச்சி வேகம் குறைந்த பட்சம் அண்மைய எதிர்காலத்தில் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

துறைமுகப் பணிகள் 0.4 சதவீதத்தால் சிறிதளவில் வளர்ச்சியடைந்து, 1998 இலிருந்து காணப்பட்ட வீழ்ச்சியடையும் போக்கைத் தொடர்ந்தன. 2000ஆம் ஆண்டின் வீழ்ச்சியடையும் தன்மையை குறிப்பாக உலக வர்த்தக விரிவாக்கத்தின் வீழ்ச்சியின் பின்னணியில் இதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஒப்பீட்டளவில் குறைந்த செயற்றிறன் மற்றும் இப்பிராந்தியத்திலுள்ள புதிய போட்டித்துறை முகங்களிலிருந்தான கடும் போட்டி என்பவற்றின் காரணமாக கையாளப்பட்ட மாற்றிக் கப்பலேற்றல் 2000ஆம் ஆண்டில் 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும் கையாளப்பட்ட உள்நாட்டுச் சரக்கின் அளவு 3 சதவீதத்தால் அதிகரித்து விரிவடைந்த வெளிநாட்டு வர்த்தகத் தொழிற்பாடுகளைப் பிரதிபலித்தது. பிஎஸ்ஏ கோப்பரேசன் (சிங்கப்பூர்) டுபாய் துறைமுக அதிகாரசபை இந்தியாவிலும் மத்திய கிழக்கிலும் தோற்றம் பெற்றுவரும் மையத்துறைமுகங்கள் போன்ற பல்புடை துறைமுகக் கைத்தொழிற் பாட்டாளர்களிடமிருந்து எழும் போட்டித் தன்மையை எதிர்கொள்ளும் பொருட்டு தற்போது, இலங்கை துறைமுக அதிகாரசபை வினைத்திறனை அதிகரிப்பதற்கும் துறைமுக வசதிகளை விரிவாக்குவதற்கும் பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. பீஅன்டஓ போன்ற பல்புடை தொழிற்பாட்டாளர்களின் நுழைவு கப்பற் கம்பனிகளின் நம்பகத்தன்மையை அதிகரிப்பதுடன், இப் பிராந்தியத்தில் வளர்ச்சியடைந்து வரும் போட்டித்தன்மைக்கெதிராக கொழும்புத்துறைமுகத்தின் நிலையை முன்னேற்றுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ஓர் சந்தர்ப்பத்தை வழங்குகிறது.

பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தை உள்ளடக்கிய போக்குவரத்து துணைத்துறை பாதைகள், புகையிரதப்பகுதி, வான்மார்க்கம் ஆகிய மூன்று வித்தியாசமான பிரிவுகளைக் கொண்டுள்ளது. இத்துறைகளின் கூட்டு வளர்ச்சிவீதம் 1999இன் 3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 4 சதவீதமாக விளங்கியது. வீதி அபிவிருத்தியிலான முன்னேற்றங்கள் உள்நாட்டு உற்பத்தி மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்துடன் இணைந்து காணப்பட்டன. பொதுமக்கள் போக்குவரத்துக்காக சொகுசு மற்றும் ஓரளவு சொகுசு பேரூந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டமை பயணிகள் போக்குவரத்துத்துறையின் பெறுமதி கூட்டலை அதிகரித்தது. இலங்கை புகை வண்டிப்பணி அதனது தொழிற்படும் இருப்புக்களுக்கு 15 புதிய வலுப்பொறிகைளச் சேர்த்துக் கொண்டது. இலங்கை புகைவண்டிப் பயணிகள் போக்குவரத்திலிருந்தான இவ் அதிகரித்த வருவாய்கள் போக்குவரத்துத் துறையில் பெறுமதி கூட்டலை அதிகரித்தது. புதிய வானூர்திகளின் கொள்வனவைத் தொடர்ந்து சிறீலங்கன் எயர்லைன்சால் பறக்கப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்கள் 1999இன் 5,185 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டின் 6,859 மில்லியனுக்கு அதிகரித்தன.

வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத்துறை 1999இன் 4.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 6.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. வெளிநாட்டு வர்த்தகத் தொழிற்பாடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வர்த்தக வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மையை முன்னேற்றியிருக்கையில், 2000 ஓகத்தில் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்கு தேவையின் மீளப்பெறல் வங்கிகளின் நிதியங்களின் உண்மையான செலவைக் குறைத்தது. காப்புறுதித் துணைத்துறை இவ்வாண்டில் சிறப்பாகச் செயலாற்றியது. ஆனால் குத்தகைத் தொழிற்பாடுகள் அதிகரித்த வட்டி வீதங்களின் காரணமாக ஆண்டின் பின்னைய அரைப்பகுதியில் கடுமையாக பாதிப்புக்குள்ளாகின.

மின்வலு, வாயு, நீர்த்துறை முன்னைய ஆண்டின் 9.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 4.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மின்வலுவுக்கான கேள்வி, முக்கியமாக தயாரிப்பு மற்றும் பணிகளிலான கூடிய வளர்ச்சியாலும் கிராமிய மின்மயமாக்கற் செயற்றிட்டங்களாலும் இவ்வாண்டில் 9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது, இக் கேள்வியை எதிர்கொள்வதற்கு மின் உருவாக்கம் 10 சதவீதத்தால் அதிகரித்தது. நீரேந்து பகுதிகளில் பருவகால மழை பெய்யாததால் இலங்கை மின்சபை (இமிச), தடங்கலற்ற மின்வலு வழங்கலைப் பேணுவதற்காக அதன் சொந்த மற்றும் தனியார் வெப்பவலுப் பொறிகளையும் வாடகைக்கமர்த்தப்பட்ட மின்உருவாக்கிகளையும் பயன்படுத்தவேண்டியிருந்தது. இதன்படி மின்வலுத் தேவையின் 52 சதவீதம் வெப்ப சக்தியால் பெறப்பட்டது. இது முன்னைய ஆண்டின் 31 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது. மின்வலு உருவாக்கத்தின் இடைநிலை உள்ளீடுகளின் செலவு, உலக பெற்றோலிய விலைகள் அதிகரித்ததால் வெப்பமின்வலு உருவாக்கத்தின் அதிகரித்த செலவு காரணமாக கணிசமானளவில் அதிகரித்தது. இதன்படி 1999இல் 8.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த மின்வலு துணைத்துறையிலான கூட்டிய பெறுமதி இவ்வாண்டில் 4.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் மெதுவடைந்தது. இதேவேளை, சேகரிப்பு, தூய்மைப்படுத்தல், குழாய் நீர் வழங்கல் என்பவற்றை உள்ளடக்கிய நீர்துணைத்துறை இவ்வாண்டில் 4.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 1999இல், ஒப்பீட்டு வளர்ச்சி வீதம் 13.7 சதவீதமாகும். தொகை வடிவிலான நீர் வழங்கல், பருவகால மழை பெய்யாததைத் தொடர்ந்து இவ்விரு காலப்பகுதிகளுக்கிடையே 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்புத்துறை 4.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. அரச துறையிலான தொழில்நிலை முக்கியமாக மாகாண நிருவாகம், பாதுகாப்பு ஆளணி, ஆசிரியர்கள், சமுர்த்தித் தொழிலாளர்கள் ஆகியவற்றில் அதே வீதத்தில் விரிவடைந்தது. இதேவேளை, சொந்தக்காரர்கள் வசிக்கும் வீடுகளால் உருவாக்கும் பணிகளின் கூட்டப்பட்ட பெறுமதியைக் கொண்டுள்ள வதிவிடத்துறையின் உடைமையின் வளர்ச்சி 1.7 சதவீதமாக விளங்கி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.8 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. முக்கிய பணிகளின் கீழ் பாகுபடுத்தப்படாத பணிகளின் தொழிற்பாடுகளை உள்ளடக்கும் ஏனைய பணிகள் துறை 1999இன் 9.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 2.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இத்துறையில் ஏற்பட்ட மெதுவான தன்மைக்கு சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக சுற்றுலா விடுதிகள் மற்றும் அதனுடன் தொடர்பான துணைத்துறைளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளில் பெருமளவில் தங்கியிருக்கும் சுற்றுலா விடுதிகள் 2000ஆம் ஆண்டில் 6.1 வீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன. சுற்றுலா வருகைகள் முன்னைய ஆண்டின் 400,414 உடன் ஒப்பிடுகையில் 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. ஆனால் தரமிடப்பட்ட சுற்றுலா விடுதிகளில் வெளிநாட்டு விருந்தினர் இரவுகள் 2.2 சதவீதத்தால் அதிகரித்ததுடன், சுற்றுலாப் பயணிகள் நீண்டகாலம் தங்கியிருந்தமையை எடுத்துக்காட்டியது. இதேவேளை, இவ்வாண்டில் உள்நாட்டுச் சுற்றுலாக் கைத்தொழில் சிறப்பாகச்

செயலாற்றி, தரமிடப்பட்ட சுற்றுலா விடுதிகளில் உள்நாட்டு விருந்தினர் இரவுகள் 15 சதவீதத்தால் அதிகரித்தமையை எடுத்துக்காட்டியது. அரச மருத்துவமனைகளில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மருத்துவ வசதிகள் மக்களின் வருமான அதிகரிப்பு மற்றும் அதிகரித்துவரும் நகர குடித்தொகை என்பனவற்றின் காரணமாக பெருமளவு கேள்வியை எதிர்கொள்ளும் தனியார் நலப்பணிகள் துணைத்துறை 2000ஆம் ஆண்டில் 10 சதவீதத்தால் வளர்ச்சியடையக் கூடியதாக இருந்தது.

பாதுகாப்பு மற்றும் தூய்மைப்படுத்தல் போன்ற வெளியிலிருந்து பெறப்படும் தொழிற்பாடுகளுக்கான அதிகரித்துவரும் போக்கு அதிகரித்த கேள்வியை உருவாக்கியதுடன் இத்துறை 2000இல் 10 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. வளர்ச்சியடைந்து வரும் கேள்வி மற்றும் மேலதிக விரிவாக்கத்திற்கான வாய்ப்புக்களைக் கொண்ட கணனி மென்பொருள் அபிவிருத்தி மற்றும் தரவு சார்ந்த பணிகள் 16 சதவீதம் கொண்ட செழிப்பான வளர்ச்சியொன்றைப் பதிவு செய்தது.

## கட்டுமானத்துறை

வதிவிட மற்றும் வர்த்தகக் கட்டடங்களின் நிருமாணமும் உட்கட்டமைப்பும் முன்னைய ஆண்டைப் போலவே 2000ஆம் ஆண்டில் 4.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி பெரும்பாலும் வலு, தொடர்பூட்டல் மற்றும் போக்குவரத்துத்துறைகளிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீதான முதலீட்டின் அதிகரிப்பின் காரணமாக விளங்கியது. எனினும், கட்டடங்களின் நிருமாணத்திலான வளர்ச்சி முன்னைய ஆண்டை விட மெதுவடைந்தது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் (தேவீஅஅ) நடைமுறைப்படுத்தப்பட்ட அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை மற்றும் வீடமைப்பு நிருமாணத்திற்காக வழங்கப்பட்ட கடன்கள் நியதிகளில் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றைக் காட்டியது. தனியார்துறை நிருமாணத் தொழிற்பாடுகள், வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியால் எடுத்துக் காட்டப்பட்டவாறு இவ்வாண்டில் மெதுவடைந்ததாகத் தோன்றுகிறது.

## சுரங்க மகழ்தல் கல்லுடைத்தல்துறை

முன்னைய ஆண்டில் 4.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த சுரங்கமகழ்தல் கல்லுடைத்தல் துறை 2000ஆம் ஆண்டில் 4.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இரத்தினக்கல் அகழ்வு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும் இரத்தினக்கற்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு காரணமாக 64 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. பொசுப்பேற்று மற்றும் காரீயத்தின் உற்பத்தி அதிகரித்திருக்கையில், இல்மனைற்று, ரூடைல், சிக்கோன் போன்ற கனிப்பொருள் மணல்களின் உற்பத்தி குறைவாகக் காணப்பட்டது. மண், உலோகக் கற்கள் சுண்ணாம்புக்கல், செங்கற்களுக்கான களிமண், கூரை ஓடுகள் போன்ற முக்கிய கல்லுடைத்தல் உற்பத்திகளுக்கான கேள்வியைத் தூண்டிய கட்டடவாக்கத் தொழிற்பாடுகளின் தொடர்ச்சியான விரிவாக்கத்துடன் கல்லுடைத்தல் துணைத்துறை 5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

## வேளாண்மைத்துறை

பொதுவாக வேளாண்மைத்துறை 1999இன் 4.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.8 சதவீதத்தால் குறைந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தது. இம் மெதுவடைவு சில குறிப்பிட்ட துறைத்துறைகளின் சோர்வடைந்த செயலாற்றத்தின் அடிப்படையில்ஏற்பட்டதாகும். எனினும், பெருந்தோட்டத்துறை இரண்டு முக்கிய பயிர்களான தேயிலை மற்றும் தெங்கின் அதிகரித்த உற்பத்தியுடன் சிறப்பாகச் செயலாற்றியது. தேயிலை உற்பத்தி அதன் கூடிய வளர்ச்சியை தொடர்ந்து ஆறாவது ஆண்டாகக் காட்டி, புதிய உச்ச மட்டமான 305.7 மில்லியன் கிலோகிறாமை அடைந்தது. இது 1999 இனைவிட 7.8 சதவீத அதிகரிப்பாகும். இது பெரும்பாலும் சிறு உடைமையாளர்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட தாழ்நிலத் தேயிலையின் உற்பத்தியில் காணப்பட்ட 11.5சதவீத அதிகரிப்பால் ஏற்பட்டதாகும். பெரும்பாலும் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ்வரும் உயர் மற்றும் மத்திய நிலத்

**அட்டவணை 2.2**
**ஏனைய வேளாண்மைத் துணைத்துறைகளின் உள்ளமைப்பு**

| துறை | பெறுமதி கூட்டப்பட்ட (1996) நிலையான விலையில் (ரூ.மில்.) | | |
|---|---|---|---|
| | 1998(அ) | 1999(அ) | 2000(அ) |
| காய்கறிகள் | 33,126 | 35,235 | 36,426 |
| துணை உணவுப் பயிர் களுக்கான உதவுதொகை (ஆ) | 15,577 | 15,781 | 16,032 |
| சிறு ஏற்றுமதிப் பயிர்கள் (இ) | 7,825 | 7,666 | 6,960 |
| கரும்பு | 1,202 | 1,281 | 1,345 |
| புகையிலை | 1,569 | 1,484 | 1,325 |
| விலங்கு வளர்ப்பு (ஈ) | 6,560 | 6,597 | 6,630 |
| ஏனையவை | 8,837 | 9,192 | 9,136 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) துணை உணவுப் பயிர்கள், உருளைக்கிழங்கு, மிளகாய், சின்னவெங்காயம், பெரியவெங்காயம், பயறு, தட்டைப்பயறு மற்றும் குரக்கன் என்பனவற்றை உள்ளடக்கும்.
(இ) சிறு ஏற்றுமதிப் பயிர்கள், கோப்பி, மிளகு, கறுவா, கராம்பு, மரமுந்திரிகை மற்றும் வெற்றிலை என்பவற்றை உள்ளடக்கும்.
(ஈ) விலங்கு வளர்ப்பு, பால், முட்டைகள், கோழி வளர்ப்பு மற்றும் ஏனைய இறைச்சி வகையை உள்ளடக்கும்.

தேயிலை உற்பத்தி 3.6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இக்காலப்பகுதியில் மொத்த நிலப்பரப்பு மாற்றமுறாது இருந்ததால் மொத்த உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு கூடிய விளைவு வீதம் காரணமாக ஏற்பட்டது. தனியார் துறையின் கீழான முன்னேற்றமடைந்த முகாமைத்துவ நெறிமுறைகள், அதிகரித்த வளமாக்கிப் பாவனை மற்றும் சாதகமான வானிலை நிலைமைகள் என்பன அதிகரித்த உற்பத்தி திறனுக்குப் பங்களிப்புச் செய்தன. இவ்வாண்டில் தேயிலை விலைகளில் ஏற்பட்ட முன்னேற்றம், தேயிலைப் பயிர்ச்செய்கையை மிக இலாபகரமானதாக்கியது. கொழும்பு ஏலத்தில் தேயிலையின் சராசரி விலை 2000ஆம் ஆண்டில் 17.3 சத வீதத்தால் இதுவரை காலமும் பதிவு செய்யப்படாத விதத்தில் கிலோகிறாமொன்றிற்கு ரூ.136.47இற்கு அதிகரித்தது. பொருளாதார மீட்சி காரணமாக ருசியா மற்றும் ஏனைய சுதந்திரப் பொதுநலவாய நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வி, எண்ணெய் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து மத்திய கிழக்கிலிருந்தான மேலதிகக் கேள்வி, உள்நாட்டு நாணயத்தின் பெறுமானத்தேய்வு என்பன தேயிலை விலைகளின் அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்தன.

தெங்கு உற்பத்தி 2000ஆம் ஆண்டில் 3,055 மில்லியன் காய்களுக்கு 8.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் முன்னைய ஆண்டில் பெய்த மழையின் சிறப்பான பரம்பலின் காலம் கடந்த தாக்கம் இம் முன்னேற்றத்துக்கு பங்களிப்புச் செய்தன. விலைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களுக்கு மத்தியிலும் இறப்பர் உற்பத்தி 1999இன் 96.6 மில்லியன் கிலோகிறாம்களிலிருந்து 2000ஆம் ஆண்டில் 87.2 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 9.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. ஒரு குறிப்பிடத்தக்க காலப்பகுதியில் நிலவிய மந்த விலைகள் மீள்நடுகை மற்றும் வளமாக்கிப் பாவனை மீது எதிர்க்கணிய தாக்கமொன்றாகக் கொண்டிருந்து தாழ்ந்த உற்பத்திக்கு இட்டுச் சென்றது.

உள்நாட்டு வேளாண்மையில், 1999/2000 பெரும்போகம் மற்றும் 2000 சிறுபோகத்தில் நெல் உற்பத்தி 2,859 ஆயிரம் மெற்றித் தொன்களாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 0.3 சதவீத சிறிதளவான வீழ்ச்சியைப் பதிவு செய்தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியிலும், நெல்லின் உற்பத்தியாளர் விலை இவ்வாண்டில் 12 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு, 1999 இறுதியில் தீர்வைக் குறைப்புக்குப் பின்பு திரட்டப்பட்ட கூடிய இருப்புக்கள் காரணமாக இருந்ததுடன், இத்துறையின் இலாபத்தன்மையையும் குறைத்தது. துணை உணவுப் பயிர்கள் வகையில், 1996 தொடக்கம் மலிவான இறக்குமதியிலிருந்தான கடுமையான போட்டி காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த உருளைக்கிழங்கு உற்பத்தி 79 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினால் வழங்கப்பட்ட உத்தரவாதமளிக்கப்பட்ட விலை, உண்மையான இறக்குமதித் தீர்வையை 80 சதவீதத்திற்கு அதிகரித்தமை, உருளைக்கிழங்குச் செய்கையாளர்களின் வெளிநின்ற கடன்களின் 75 சதவீதத்தை தள்ளுபடி செய்வதற்கான அரசின் தீர்மானம் என்பன அவர்களை ஊக்கப்படுத்தின. எனினும், பெரிய வெங்காயம், பாசிப்பயறு, மிளகாய் என்பவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட பெருமளவு வீழ்ச்சி உருளைக்கிழங்கிலான வளர்ச்சியின் சாதகமான தாக்கத்தை இல்லாமற் செய்ததுடன் துணை உணவுப் பயிர்கள் வகை 1 சதவீதத்தால் மட்டும் வளர்ச்சியடைந்தது. பெரிய வெங்காயம் மற்றும் மிளகாய் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மலிவான இறக்குமதிகளுடன் சந்தையில் நிலவிய மந்தமான விலைகள் காரணமாகின. இதேவேளை, மரக்கறிகளின் உற்பத்தி 2000ஆம் ஆண்டில் 3.4 சதவீதத்தால் முன்னேற்றமடைந்தது. கராம்பு, பாக்கு, கொக்கோ, கோப்பி மற்றும் மரமுந்திரிகை உற்பத்தியில் வீழ்ச்சி காணப்பட்டதுடன், சிறு ஏற்றுமதிப் பயிர்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் நியதிகளில் 6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

2000இல் கால்நடை வளர்ப்பின் வெளியீட்டிலான அதிகரிப்பு மிகச் சிறியளவிலேயே காணப்பட்டது. இத்துணை வகையில், கேள்வியில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் முன்னேற்றமடைந்த சந்தை வலையமைப்புகளால் கோழி இறைச்சி உற்பத்தி 18 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. எனினும் மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி போன்ற ஏனைய இறைச்சிகளின் உற்பத்தி வீழ்ச்சியடைந்திருக்கையில் முட்டை உற்பத்தி 1.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## 2.3 செலவு

உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட கூட்டுக்கேள்வி மொத்த உள்நாட்டுச் செலவினால் அளவிடப்படுகின்றது. இது பொருளாதாரத்தின் தனியார் மற்றும் அரச துறைகளின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவின் (மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்) தொகையாகும்.

நடைமுறைச்சந்தை விலைகளில் நுகர்வுச் செலவு ரூ1,038 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதோடு இது முன்னைய ஆண்டில் பதிவு செய்த ரூ.890 பில்லியனை விட 16.6 சதவீத அதிகரிப்பாகும். மொத்த செலவின் பெரும்பாலும் 90 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப படுத்தும் தனியார் நுகர்வுச் செலவு 1999இன் ரூ.790 பில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ரூ.906

**அட்டவணை 2.3**

**நிலையான (1996) விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்**

| விடயம் | சதவீதப் பங்கு | | | சதவீத வளர்ச்சி | |
|---|---|---|---|---|---|
| | 1998(அ) | 1999(அ) | 2000(அ) | 1999 | 2000 |
| 1. மொத்த மூலவளங்கள் | 100 | 100 | 100 | 5.2 | 9.0 |
| சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி | 67 | 67 | 65 | 4.3 | 6.0 |
| பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் | 33 | 33 | 35 | 7.0 | 14.9 |
| 2. பயன்பாடு | 100 | 100 | 100 | 5.2 | 9.0 |
| நுகர்வு | 59 | 59 | 57 | 5.3 | 5.2 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 17 | 18 | 18 | 6.4 | 9.5 |
| அரசு | 2 | 2 | 2 | -2.0 | 5.5 |
| அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை | 15 | 16 | 16 | 7.7 | 10.0 |
| இருப்புக்களின் மாற்றம் | 0 | 0 | 0 | -45.9 | -58.2 |
| பொருட்களினதும்காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 24 | 24 | 26 | 4.0 | 18.0 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பில்லியனுக்கு 14.7 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. 1999இல் நேரிணையான வளர்ச்சி வீதம் 9.2 சதவீதமாகும். இவ் உயர்ந்த வளர்ச்சி 2000இலான கூடிய உண்மையான பொருளாதார வளர்ச்சியால் ஏற்பட்டதுடன், அதிகரிக்கத்தக்க செலவழிக்கத்தக்க வருமானத்தையும் 2000ஆம் ஆண்டில் விலைகளில் ஒப்பீட்டளவிலான உயர்ந்த வளர்ச்சியையும் அது ஏற்படுத்தியது.

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகள் மீதான தனியார், நுகர்வுச் செலவு 1999இன் 10 சதவீதத்திற்கெதிராக 2000ஆம் ஆண்டில் 21 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இறக்குமதி செய்யப்பட்ட விடயங்களில் முக்கிய உணவு விடயங்கள் மீதான செலவு 11 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஏனைய உணவு விடயங்கள் மற்றும் நீண்டகாலப் பாவனைப் பொருட்கள் மீதான செலவு 23 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இறக்குமதி செய்யப்பட்ட உணவு விடயங்களில், கோதுமைத் தானியம், சீனி, பால் உற்பத்திகள், கருவாடு மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட மீன் மீதான செலவு விலைகள் மற்றும் நுகரப்பட்ட அளவு இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக கணிசமானளவில் அதிகரித்திருக்கையில், அரிசி இறக்குமதி மீதான செலவு அரிசி இறக்குமதித் தடையால் குறிப்பிடத்தக்களவில் (90 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது.உந்து ஊர்திகள் மருந்து மற்றும் மருந்தாக்கற் பொருட்கள் மீதான செலவு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. வாகன இறக்குமதிகள் மீதான அதிகரிப்பு குறிப்பிட்ட அரச துறை ஊழியர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்பட்ட இறக்குமதித் தீர்வைச் சலுகைகள் காரணமாக ஓரளவிறகு ஏற்பட்டது. இதேவேளை, முன்னைய ஆண்டில் சிறிதளவால் வளர்ச்சியடைந்த இறக்குமதி செய்யப்பட்ட காரணியல்லா பணிகள் மீதான செலவு இவ்வாண்டில் 20 சதவீதத்தால் அதிகரித்தது.

செலவிடத்தக்க வருமானத்தில் உயர் பொருளாதார வளர்ச்சியினால் ஏற்பட்ட நேர்க்கணியத் தாக்கத்தை பிரதிபலிக்கும் வகையில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மீதான செலவு 12 சதவீதத்தால் அதிகரித்தது. உணவு மீதான செலவு 3 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு சில உணவுகளுக்கான உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியும், ஏனையவற்றுக்கான உயர்ந்த சந்தை விலைகளும் காரணமாக விளங்கின. கைத்தொழிற் பொருட்கள் மீதான செலவு முன்னைய ஆண்டை விட 17 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வகையில், தயாரிக்கப்பட்ட உணவு , குடிபானங்கள், ஆடைகள் மற்றும் பிளாத்திக்குப் பொருட்களின் நுகர்வு கணிசமான அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தது. இத்துடன், தொலைத் தொடர்பூட்டல், போக்குவரத்து, பயன்பாட்டுப் பணிகள் மற்றும் நிதியியற் பணிகள் 12 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.

1999இல் 18 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 2000ஆம் ஆண்டில் ரூ.351 பில்லியனுக்கு 16 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த முதலீடுகளில் 77 சதவீதத்தைக் கொண்டுள்ள தனியார் துறை 18 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் அரச முதலீட்டிலான அதிகரிப்பு 13 சதவீதமாக விளங்கியது. துறைமுகப்பணிகள், தொடர்பூட்டல்கள், வான் போக்குவரத்து, போக்குவரத்து மற்றும் வீதி அமைப்பு போன்ற உட்கட்டமைப்பு வசதிகளின் விரிவாக்கத்தில் தனியார்துறை, அரசதுறை ஆகிய இரண்டினதும் முதலீட்டுச் செயற்றிட்டங்கள் கவனம் செலுத்தின.

## 2.4 மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

மொத்த உள்நாட்டு உற்பத்தி மறறும் பொருட்களினதும், காரணியல்லாப் பணிகளினதும் (வெளிநாட்டு மூலவளங்கள்) இறக்குமதிகள் என்பவற்றை

உள்ளடக்கிய பொருளாதாரத்துக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த மொத்த மூலவளங்கள் நடைமுறைச் சந்தை விலைகளில் 1999இன் ரூ.1,584 பில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ரூ. 1,880 பில்லியனுக்கு அதிகரித்தது. ரூ296 பில்லியன் கொண்ட இந்த அதிகரிப்பானது உற்பத்தியின் நடைமுறைச் சந்தை விலைகளில் ரூ.150 பில்லியன் கொண்ட அதிகரிப்பினாலும், வெளிநாட்டு மூலவளங்களின் ரூ.146 பில்லியன் கொண்ட அதிகரிப்பாலும் உருவாக்கப்பட்டது.

நிலையான விலைகளில் (1996) மதிப்பிடப்பட்ட மூலவளங்களின் கிடைப்பனவு முன்னைய ஆண்டின் 5.2 சதவீதத்திற்கெதிராக 2000ஆம் ஆண்டில் 9 சதவீதத்தால் அதிகரித்து உயர்ந்த உண்மை வளர்ச்சியையும் அதிகரித்த இறக்குமதிகளின் அளவையும் பிரதிபலிக்கின்றது. 2000ஆம் ஆண்டில் நுகர்வுச் செலவு 5.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த வேளையில், மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் 9.5 சதவீதத்தினால் ரூ.259 பில்லியனுக்கு அதிகரித்தது. வெளிநாட்டு மூலவளங்களின் பங்கு 33 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்த மூலவளங்களில், நுகர்வுக்காக 57 சதவீதமும், மொத்த மூலதன ஆக்கத்திற்காக 18 சதவீதமும் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளுக்கு 25 சதவீதமும் பயன்படுத்தப்பட்டது.

## 2.5 உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள்

உள்நாட்டுச் சேமிப்புக்கள், எச்சமொன்றாக அதாவது முதலீட்டுக்கும் வெளிநாட்டு மூலவளங்களுக்கும் இடையிலான வேறுபாடாக மதிப்பிடப்பட்டுள்ளது. (பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் தேறிய இறக்குமதிகளென வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது). 1999இன் 19.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000இல் நடைமுறைச் சந்தை விலைகளில் உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ.218 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 1999இன் 19.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 17.3 சதவீதமாக விளங்கியது. உள்நாட்டு சேமிப்புக்களின் விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, தனியார் துறை சேமிப்புக்களின் விகிதம் 1999இன் 20.5 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 20.7 சதவீதத்திற்கு மிகச் சிறிதளவில் வளர்ச்சியடைந்தமையால் அரசின் குறைச் சேமிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1 சதவீதத்திலிருந்து 3.4 சதவீதத்திற்கு அதிகரித்ததைப் பிரதிபலித்தது.

உள்நாட்டுச் சேமிப்புக்கள் வெளிநாட்டு மாற்றல்கள் மற்றும் தேறிய காரணி வருவாய் என்பவற்றின் மொத்தத் தொகையாகிய தேசிய சேமிப்புக்கள் முக்கியமாக வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் காரணமாக ரூ.269 பில்லியனுக்கு அதிகரித்தது. எனினும் உள்நாட்டு சேமிப்பு விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் தேசிய சேமிப்பு விகிதம் (தேசிய சேமிப்புக்கள் மொஉஉ இன் சதவீதமாக) 1999இல் பதிவு செய்யப்பட்ட 23.5 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 21.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முக்கியமாக மத்திய கிழக்குத் தொழிலாளர்களிடமிருந்தான பண அனுப்பல்களை உள்ளடக்கிய தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் 2000ஆம் ஆண்டில் சேமிப்புக்களில் ஏறத்தாழ 27 சதவீதத்திற்கு வகை கூறியது.

**அட்டவணை 2.4**
நடைமுறைச் சந்தை விலைகளில் தேசிய சேமிப்புக்கள்

ரூ.மில்லியன்

| வகை | 1997 | 1998 | 1999(அ) | 2000(அ) |
|---|---|---|---|---|
| 1. சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி | 890,272 | 1,017,986 | 1,105,964 | 1,255,536 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 154,237 | 194,735 | 215,734 | 217,767 |
| 3. வெளிநாட்டில் இருந்தான தேறிய காரணி வருமானம் | -9,409 | -11,556 | -17,831 | -22,967 |
| 4. வெளிநாட்டில் இருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் | 46,472 | 54,785 | 62,438 | 73,810 |
| 5. தேறிய சேமிப்புக்கள் | 191,301 | 237,965 | 260,341 | 268,610 |
| 6. உள்நாட்டு சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 2) | 17.3 | 19.1 | 19.5 | 17.3 |
| 7. தேசிய சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 5) | 21.5 | 23.4 | 23.5 | 21.4 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.